பக்கங்கள்: 06

# காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 24 திங்கட்கிழமை 09.11.2020 கதிர் 235

# கொரோனா வைரஸ் அச்சத்தால் இலங்கையில் மூவர் தற்கொலை

## தாதியர்களை ஏற்றிச் சென்ற பஸ் சாரதியும் உள்ளடக்கம்

கொழும்பு, நவம்பர் 09

இலங்கையில் கொரோனா வைரஸின் அச்சுறுத்தல் காரணமாக அச்சமடைந்து மேலும் இருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இந்தநிலையில், இதே காரணத்துக்காகத் தற்கொலை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 3ஆக அதிகரித்துள்ளது.

ஏற்கனவே கம்பஹாவில் உள்ள விசேட தேவையுடைய நபர் ஒருவர் தாய்க்குக் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக பரிசோதனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதை அடுத்து அண்மையில் தற்கொலை செய்துகொண்டார்.

2

## அநுராதபுரத்தைச் சேர்ந்த யாசகருக்குக் கொரோனா

அநுராதபுரம் நகரைச் சேர்ந்த யாசகர் ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து குறித்த பகுதியில் உள்ள மேலும் 81 யாசகர்களைத் தனிமைப்படுத்த விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என அநுராதபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

2

## நவம்பர் 23ஆம் திகதியே பாடசாலைகள் ஆரம்பம்!

### கல்வி அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு




மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக பாடசாலைகள் நவம்பர் 23ஆம் திகதி மீளத் திறக்கப்படும் என்று கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இன்று தெரிவித்தார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பாடசாலைகள் இன்று மீள திறக்கப்படும் என கல்வி அமைச்சு ஏற்கனவே அறிவித்திருந்தது. எனினும், கொரோனாப் பரவலால் மாணவர்களின் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டே மேலும் இரு வாரங்களுக்கு விடுமுறையை நீடிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் கல்வி அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

## கொரோனா ஊரடங்கை மீறிய 2 ஆயிரத்து 923 பேர் சிக்கினர்

### 438 வாகனங்களும் பறிமுதல்

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டில் இன்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரப் பகுதியில் 91 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் இதன்போது 12 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸ் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண

2

## கோட்டா – ஜின்பிங் பேச்சு: மறுக்கிறது சீனத் தூதரகம்




சீன ஜனாதிபதி சின் ஜின்பிங்குடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இணைய மூலமான பேச்சில் ஈடுபட்டார் என்று வெளியாகிய செய்திகளை சீன அரசு அடியோடு நிராகரித்துள்ளது.

இருவருக்கிடையிலான பேச்சு குறித்து கொழும்பிலிருந்து வெளிவரும் வாராந்த பத்திரிகையொன்று நேற்று செய்தியை

2

## செட்டிகுளத்தில் கடை ஒன்று தீயில் எரிந்து சாம்பலாகியது

### பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் நாசம்



வவுனியா, செட்டிகுளம் பகுதியில் கடையொன்று தீப்பற்றியதில் பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

இன்று அதிகாலை செட்டிகுளம் பகுதியில் உள்ள இரும்பகம் ஒன்றே இவ்வாறு எரிந்து சாம்பலாகியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

2

## டிப்பருடன் மோதியது ஓட்டோ; சிறுவர் உட்பட மூவர் படுகாயம்



கிளிநொச்சியில் ஏ - 9 வீதி வலயக்கல்வி பணிமனை அருகில் திடீரென டிப்பர் வாகனம் பிரேக் அடித்ததால் பின்னால் வந்துகொண்டிருந்த ஓட்டோ, டிப்பரின் பின்பகுயில் மோதுண்டு விபத்துக்குள்ளாகியது.

2

## உழவு இயந்திரம் தடம்புரண்டு இளைஞர் ஒருவர் சாவடைந்தார்

உழவு இயந்திரமொன்று தடம் புரண்டதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு, உன்னிச்சை - கரவெட்டியாறு வயற்பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை உழவு இயந்திரமொன்று தடம் புரண்டதில் 18 வயதுடைய

2

## காட்டு யானையின் தாக்குதலில் மட்டு. கரடியனாறில் ஒருவர் சாவு

மட்டக்களப்பு - பதுளை வீதியை அண்டியுள்ள அலியாஓடை எனும் வயற் பிரதேசத்தில் காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகி ஒருவர் உயிரிழந்துள்ளார் எனக் கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் சந்திவெளி கிராமத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான காத்தமுத்து ஏரம்பமூர்த்தி (வயது 44)

2

## தமிழகத்துக்கு நிதி நிறுவன முகாமையாளரை ஏற்றிச் சென்ற படகோட்டிக்கு விளக்கமறியல்!

(ந.லோகதயாளன்)

இலங்கையில் இருந்து தமிழ் நாட்டுக்கு சட்ட விரோதமான முறையில் தப்பிச் சென்ற நிதி நிறுவன முகாமையாளரையும் அவரது மனைவி, மகளையும் அவ்வாறு தப்பிச் செல்வதற்கு படகு ஒன்றில் ஏற்றிச் சென்றவர் எனக் கருதப்படும் படகோட்டி கைது செய்யப்பட்டு 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தொண்டைமானாறு மீனவரான 32 வயதுயுடைய ஒருவரே வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பருத்தித்துறை நீதிவான் முன்னிலையில் இன்று ஆஜர்படுத்தப்பட்டார். இதேவேளை, இலங்கையில் இருந்து தப்பிச் சென்ற நிதி நிறுவன முகாமையாளர் குடும்பத்துடன் இந்தியாவில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நிவாரணம் பெற வரிசையில் நின்ற பெண் மயங்கி வீழ்ந்து சாவடைந்தார்

கொரோனா கால நிவாரணமாக அரசு வழங்கும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு பெற வரிசையில் காத்திருந்த பெண் ஒருவர் மயக்கமடைந்து கீழே வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கந்தானையில் நேற்று இடம்பெற்றுள்ளது.

கொரோனா காரணமாக வாழ்வாதாரத்தை இழந்தவர்களுக்கு அரசு வழங்கும் உதவித்தொகையைப்பெறுவதற்காக வரிசையில் காத்திருந்தபோது, காதிரானாவில் வசிக்கும் 62 வயதான குறித்த பெண் கிராம சேவகர் அலுவலக வளாகத்தில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

அவரின் மாதிரியை பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்துமாறு நீர்கொழும்பு சட்ட மருத்துவ அதிகாரி உத்தரவிட்டுள்ளார்.

## மாத்தறை சிறையிலும் பெண் கைதி ஒருவருக்கு கொரோனாத் தொற்று

மாத்தறை சிறைச்சாலையில் உள்ள பெண் கைதி ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனை அடுத்து குறித்த பெண் கைதி கம்புருகமுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2

## மேல் மாகாணத்திலிருந்து மலையகத்துக்கு சென்றவர்கள் திருப்பி அனுப்பப்பட்டார்கள்!

மேல் மாகாணம் உட்பட கொரோனா வைரஸ் வேகமாக பரவும் அபாய வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ள பகுதிகளிலிருந்து மலையகப்பெருந்தோட்டப்பகுதிகளுக்கு இன்று சென்ற வாகனங்களும், அதில் பயணித்தவர்களும் திருப்பி அனுப்பப்பட்டார்கள்.

மேல் மாகாணத்திலும் நாட்டில் ஏனைய சில பகுதிகளிலும் பிறப்பிக்கப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் இன்று காலை 5 மணிக்குத் தளர்த்தப்பட்டது. எனினும், வெளி மாவட்டங்களுக்கு பயணம் மேற்கொள்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு மக்களிடம் கோரப்பட்டுள்ளது.

அதேபோல மேல் மாகாணம்

2



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## காட்டு யானையின் தாக்குதலில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்பவரே உயிரிழந்துள்ளார்.

இவர் வழமைபோன்று வயல் காவலில் ஈடுபட்டிருந்தபோது காட்டுக்குள் இருந்து பிரவேசித்த யானை இவரைத் தாக்கியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவரின் சடலம் செங்கலடி பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டது. இச்சம்பவம்பற்றி கரடியனாறு பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

## செட்டிகுளத்தில் கடை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்று அதிகாலை வீதியால் சென்றவர்கள் கடைக்கு மேலாக புகை வருவதை அவதானித்து அருகில் சென்று பார்த்தபோது கடைக்கு உள்ளே தீப்பற்றுவதை அவதானித்து அத்தீயை அணைக்க முயற்சித்துள்ளனர்.

இருப்பினும் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியாத நிலையில் செட்டிகுளம் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியிருந்தனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற செட்டிகுளம் பொலிஸார், வவுனியா நகர சபை தீயணைப்புப் பிரிவுக்குத் தகவல் வழங்கினர்.

குறித்த இடத்துக்குச் சென்ற தீயணைப்புப் பிரிவினர் பொலிஸார் மற்றும் பிரதேச மக்களும் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொன்டுவந்தன.

இருப்பினும் குறித்த வியாபார நிலையத்துக்குள் இருந்த சுமார் 80 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய பொருள்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

தீப்பற்றலுக்கான காரணம் கடைக்குப் பொருத்தப்பட்டிருந்த மின்சாரத்தின் ஒழுக்கு எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீப்பற்றல் தொடர்பான மேலதிக விசாரணைகளை செட்டிக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (100)

## மாத்தறை சிறையிலும் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குறித்த பெண் கைதி இம்மாதம் முதலாம் திகதி வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து மாத்தறை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதனை அடுத்து மாத்தறையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் மூலம் அவருக்குக் கொரோனாத் தொற்றுஇருப்பதுகண்டறியப்பட்டுள்ளது.

## மேல் மாகாணத்தி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உட்பட கொரோனா வைரஸ் பரவக்கூடிய பகுதிகளில் உள்ளவர்கள், தீபாவளி பண்டிகைக்காக மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளுக்கு வருகைதர வேண்டாம் எனவும், அவ்வாறு வந்தால் குடும்பத்தோடு சுய தனிமைக்கு உட்படுத்தப்படுவீர்கள் எனவும் சுகாதார வைத்திய அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

இந்தநிலையில், வெளியிடங்களில் இருந்து மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளுக்குவருபவர்களைத்தடுப்பதற்கும், கண்காணிப்பதற்கும் பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து கூட்டு சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இதன்படி ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியில் கினிகத்தேனை தியகல, கலுகல பகுதியிலும், ஹட்டன் - கண்டி பிரதான வீதியில் கினிகத்தேனை பகத்தொழுவ பகுதியிலும் விசேட சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. 24 மணிநேரமும் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வீதிகள் ஊடாக வரும் அனைத்து வாகனங்களும் சோதனைக்குட்படுத்தப்படும். இந்தநிலையில் அநாவசியமான முறையில் பெருந்தோட்டப்பகுதிகளுக்கு இன்று செல்ல முற்பட்ட வாகனங்களும், அதில் பயணித்தவர்களும் திருப்பி அனுப்பப்பட்டார்கள்.

அத்துடன், அங்கு வருபவர்கள் தொடர்பானதகவல்களும்திரட்டப்படுகின்றன. தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வருபவர்களை அவர்கள் தங்கி இருக்கும் இடத்திலேயே 14 நாள்களுக்குத் தனிமைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## டிப்பருடன் மோதியது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பூநகரியிலிருந்து கிளிநொச்சியிலுள்ள தமது வீட்டுக்கு ஓட்டோவில் சென்று கொண்டிருந்த குடும்பமே இந்த விபத்தில் சிக்கியுள்ளது.

இதில் ஓட்டோவில் பயணித்த சிறுவர் உட்பட மூவர் காயமுற்ற நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்கள்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள்.

## உழவு இயந்திரம் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இளைஞரொருவர் உயிரிழந்துள்ள நிலையில் மற்றுமொரு இளைஞர் படுகாயமடைந்துள்ளார்.

அருணாச்சலம் அஜித்குமார் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், காயமடைந்த இளைஞர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

சடலம், பிரேத பரிசோதனைக்காக செங்கலடி பிரதேச வைத்தியசாலையில் இருந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சம்பவத்தில் பலியான இளைஞர் சாரதி அனுமதிப்பத்திரம் பெறாதவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## கொரோனா ஊரட......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவித்தார்.

ஒக்டோபர் 4ஆம் திகதி முதல் ஊரடங்கு உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக இதுவரை 2 ஆயிரத்து 923 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும், 438 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன எனவும் பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார்.

## கோட்டா – ஜின்பிங் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வெளியிட்டி ருந்தது.

எனினும், அப்படியொரு விசேடமான பேச்சு இடம்பெறவில்லை என்று கொழும்பிலுள்ள சீனத் தூத ரகம் அதன் உத்தியோகபூர்வ டுவிட் டர் பக்கத்தில் இன்று தெரிவித்துள் ளது.

கடந்த 04ஆம் திகதி ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி மற்றும் சீன கம்யூனிஸ்ட் கட்சிப் பிரதிநிதிகளுக்கு இடையிலான இணைய வாயிலான பேச்சு இடம்பெற்றதை விடுத்து இரு நாட்டு அரச தலைவர்களுக்கும் இடையே எந்தவித பேச்சும் இடம்பெறவில்லை என்றும் தூதரகம் விளக்கமளித்துள்ளது.

## கொரோனா வைரஸ் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதேவேளை, களுத்துறை டிப்போவில் பணியாற்றிவரும் சாரதி ஒருவர் கொரோனா அச்சத்தால் மன விரக்தியடைந்து நேற்று வீட்டின் முன் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

நாகொடை வைத்தியசாலையில் பணியாற்றும் தாதியர் குழாமை அழைத்துச்செல்லும் பஸ் சேவையின் சாரதியாக அவர் கடமையாற்றி வந்தவராவார்.

அதேவேளை, கம்பஹா - ஏக்கல பிரதேசத்திலும் வயோதிபப் பெண் ஒருவர் கொரோனா அச்சத்தால் இன்று தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

# ஆணைக்குழுவை விமர்சித்த சஜித் அணியின் ஐந்து எம்.பிக்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்



அரசியல் பழிவாங்கல்கள் குறித்து விசாரணை நடத்தும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் பேரில் ஐக்கிய மக்கள் சக்தியின் 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முடிவு செய்துள்ளது.

ஹரின் பெர்னாண்டோ, சுஜித் பெரேரா, மயந்த திஸாநாயக்க, நளின் பண்டார மற்றும் ஜே.சி.அலவத்துவல ஆகிய 5 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆணைக்குழு முன்னிலையில் இன்று ஆஜரானார்கள்.

இந்த ஆணைக்குழு நாட்டின் சட்ட விதிகளை மீறி நியமிக்கப்பட்டது எனவும், அரசு நிதியைத் தவறாகப் பயன்படுத்துகின்றது எனவும் கூறி இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவில் ஐக்கிய மக்கள் சக்தியின் மேற்படி 5 எம்.பிக்களும் சமீபத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

அதையடுத்து தமது அதிகாரத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் 5 நாடாளுமன்ற உறுப்பினர்களும் சவாலுக்கு உட்படுத்துகின்றனர் என்று ஜனாதிபதி ஆணைக்குழு குற்றஞ்சாட்டியிருந்தது.

அவர்கள் எங்களுக்கு எதிராக மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வார்கள் என்று எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. நாங்கள் நீதித்துறையை மதிக்கின்றோம். ஆனால், எங்கள் 5 எம்.பிக்களும் செய்த முறைப்பாடு தவறில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரா இன்று செய்தியாளர்களிடம் கூறினார்.

ஆணைக்குழுவால் குற்றஞ்சாட்டப்பட்ட சஜித் அணியின் 5 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது கருத்துரிமையை நசுக்குகின்றார்கள் என்பதை வெளிப்படுத்தி கறுப்புப்பட்டியால் வாயை மூடியிருந்தனர்.

நல்லாட்சிக் காலத்தில் 2015 - 2019 ஆண்டுகளுக்கிடையில் அரசியல் ரீதியில் பாதிக்கப்பட்டவர்களின் சம்பவங்களை விசாரிக்க 2019ஆம் ஆண்டு நவம்பரில் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவால் இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. குறித்த ஆணைக்குழு தனது நடவடிக்கைகளை முடித்து, இந்த வாரம் அறிக்கையைச் சமர்ப்பிக்கவுள்ளது.

# மனைவியிடம் அடிவாங்கினாரா நாமல்? ஏற்பட்ட காயம் குறித்து அவரே விளக்கம்

கொழும்பு, நவ.09

விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தனது கண்ணின் ஓரத்தில் ஏற்பட்டுள்ள காயம் குறித்து வெளியிட்டுள்ள கருத்து சமூக ஊடகங்களில் வைரலாகப் பரவி வருகின்றது.

நிகழ்வொன்றில் உரையாற்றிய அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, தனது கண் ஓரத்தில் காயம் ஏற்பட்டிருப்பது மனைவியின் தாக்குதலால் அல்ல, கடலில் நீராடச் சென்றபோது ஏற்பட்ட காயம் என்று கூறியுள்ளார்.

# கொழும்பு மெனிங் சந்தைக்குள் பதற்றம்

கொழும்பு மெனிங் சந்தையில் இன்று காலை பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது.

மேல் மாகாண ஊரடங்கு சட்டம் இன்று அதிகாலை நீக்கப்படும் என்பதுடன் மெனிங் சந்தையும் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு வந்தது.

அந்தவகையில் மொத்த வியாபாரிகள் பலரும் இன்று அதிகாலை 5 மணிக்கு ஊரடங்கு நீக்கப்பட்ட பின் வர்த்தக நடவடிக்கைக்காக மெனிங் சந்தைக்குள் பிரவேசிக்க சென்றபோது பொலிஸார் அவர்களை அனுமதிக்கவில்லை. இதனால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது.

பின்னர் வர்த்தகர்கள் வீதியோரங்களில் தங்களது மறக்கறிகள் மற்றும் விற்பனை பொருள்களை விற்றனர்.

# குருநாகலில் கொரோனாவால் மற்றுமொரு நகரம் முடங்கியது

குருநாகல், நவ.09

குருநாகல் மாவட்டத்தில் நிக்கவரட்டிய நகரம் இன்று தொடக்கம் எதிர்வரும் மூன்று நாள்களுக்கு முடக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட 6 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் அவர்களுடன் நெருக்கமாக இருந்த பலரும் நிக்கவரட்டிய நகரிலுள்ள பல்வேறு வர்த்தக நிலையங்களுக்கும் சென்றுவந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதையடுத்தே மேற்படி வர்த்தக நிலையங்கள் அனைத்தையும் மூடி முடக்கும் நிலைக்கு செல்லத் தீர்மானித்ததாக நிக்கவரட்டிய வர்த்தக சங்கம் அறிவித்துள்ளது.

## அநுராதபுரத்தைச் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குறித்த யாசகர்களைப் பொலிஸாரின் உதவியுடன் கைதுசெய்து தனிமைப் படுத்த அநுராதபுரம் நகராட்சி மன்றம் நடவடிக்கை எடுத்துள்ளது எனவும் அவர் கூறினார்.

கொரோனாத் தொற்று உறுதியான 80 வயதுடைய குறித்த யாசகர் தற்போது அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மங்களவின் சுடலை ஞானம்

இலங்கை அரசியல்வாதிகள் பலருக்கு அவ்வப்போது 'சுடலை ஞானம்' பிறப்பதுண்டு.

அப்படி 'ஞானம்' பிறந்து பேசியிருக்கின்றார் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர.

இந்த நாட்டு அரசியலில் அதிகாரத்தில் இருந்து அடிபட்டு, செல்வாக்கிழந்து போன தலைவர்கள் பலருண்டு.

சந்திரிகா குமாரதுங்க, மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க, கரு ஜயசூரிய, மங்கள சமரவீர என்று இந்தப் பட்டியல் நீண்டது.

போகின்ற போக்கில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் கூட அப்படியாகி விடுவாரோ என்று அரசியல் அவதானிகள் எண்ணாமலில்லை.

பிரேமதாஸ காலத்தில் ரி.பி.விஜேதுங்கவும், சந்திரிகா மற்றும் மஹிந்தவின் காலங்களில் ரட்ணசிறி விக்ரமநாயக்கா, டி.எம்.ஜயரத்ன போன்றோரும் 'றப்பர் ஸ்டாம்ப்' பிரதமர்களாக இருந்ததுண்டு. அந்த வகையறாக்களில் தாமும் இனிமேல் அடங்கப்போகின்றாரா அல்லது தாம் தனித்துவமான பிரதமரா என்பதை மஹிந்த ராஜபக்ஷ இனிமேல்தான் காட்ட வேண்டும்.

இப்படி அதிகாரத்தில் இருந்த பலரும், அது பறிபோன பின்னர், 'சுடலை ஞானம்' பிறப்பது போல பேசுவார்கள். அடிக்கடி முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் அதனை நாம் காண்கின்றோம்.

இப்போது அவர்கள் பேசும் நியாயங்களை – நீதிகளை – அவர்கள் அதிகாரத்தில் இருந்த போது செயலில் செய்திருப்பார்களாயின், அல்லது அந்த விதத்தில் விடயங்களை அணுகியிருப்பார்களாயின், நாட்டின் பல தேசியப் பிரச்சினைகளுக்கு எப்பவோ தீர்வு கிட்டியிருக்கும் என நாம் நம்பலாம்.

அந்த வகையில் இப்போது முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர ஒரு கருத்தை முன்வைத்திருக்கின்றார்.

அமெரிக்காவின் துணை ஜனாதிபதியாக கமலா ஹரிஸ் அம்மையார் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றமையை ஒட்டித் தாம் வெளியிட்ட டுவிட்டர் செய்தியிலேயே இந்த விடயத்தை அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

*"நம்மைச் சார்ந்த பெண்ணொருவர் உலகிலேயே மிகவும் பலம் பொருந்திய பெண்ணாக மாறியுள்ளமை தெற்காசியாவைச் சேர்ந்த அனைவரும் பெருமிதம் கொள்ளத்தக்க விடயமாகும். இதனைப் போன்று இனம், மதம், சாதி போன்றவற்றை விடுத்து, திறமை, தகுதி ஆகியவற்றின் அடிப்படையில் இலங்கை எப்போது ஒரு தலைவரைத் தெரிவு செய்யப் போகின்றது?"* – என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதனைத்தான் 'சுடலை ஞானம்' என்று குறிப்பிட விரும்புகிறோம். அதிகாரத்தில் இருந்தபோது இனம், மதம், சாதி கடந்து செயற்படக் கிடைத்த அருமையான வாய்ப்பை முறியடித்து, இந்த நாட்டைபேரினவாதத்துக்குள் தள்ளியமையில் மங்கள சமரவீரவுக்கும் பங்குண்டு.

பேரெழுச்சி கொண்டு விஸ்வரூபம் எடுத்து நிற்கும் தென்னிலங்கையின் பௌத்த, சிங்களப் பேரினவாதத்தைப் பார்த்து இப்போது மலைத்து, அதன் விபரீதத்தைப் புரிந்து கொண்டு, அதற்கு எதிராக இங்கொன்றும், அங்கொன்றுமாக அவர் இப்போது கருத்து வெளியிட்டாலும், அந்தப் பேரினவாதப் பிடியை இலங்கையில் வலுவாக நிலை நிறுத்தியமையில் அவருக்கும் அதிக பங்குண்டு என்பதை மறுப்பதற்கில்லை.

அவர் தம்மை பேரினவாதியாகக் காட்டிக் கொள்ளவில்லை, அடையாளப்படுத்தவில்லை என்பது உண்மைதான். ஆனால் பேரினவாத மேலாதிக்கத்துக்கு அடி பணிந்துபோன தென்னிலங்கை அரசியல்வாதிகளுள் அவரும் ஒருவர்.

பேரினவாதத்தின் மேலாதிக்கத்தில் தமது அரசியல் செல்வாக்கும் அடிபட்டுப்போன நிலையில் இன்று ஆதங்கத்தோடு அவர் உபதேசம் செய்கின்றார். 'ஞானம்' பிறந்தவராகப் பேசுகின்றார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இனம், மதம், சாதி போன்றவற்றைக் கடந்து அப்போது வெளிவிவகார அமைச்சராக இருந்த தமிழரான லக்ஷ்மன் கதிர்காமரை நாட்டின் பிரதமராக நியமிக்க முயன்றபோது, அந்த அரசில் செல்வாக்கு மிக்கவராக இருந்த இதே மங்கள சமரவீரவும் அப்பதவி கதிர்காமருக்கு வழங்கப்படாமல், பறித்து மஹிந்த ராஜபக்ஷவிடம் வழங்கப்பட்டமைக்கு முக்கிய காரணமாக இருந்தார் என்பது மறந்து விடக் கூடிய அல்லது மறைக்கப்பட்டு விடக் கூடிய விவகாரமன்று.

அந்தப் பிரதமர் நியமனம்தான் நாட்டின் செல்நெறியை இப்படி இனங்களுக்கு இடையில் முரண்பாட்டின் உச்ச நிலைக்குக் கொண்டு செல்வதற்குப் பிரதான காரணமாயிற்று என்பதும் கூட புரிந்து கொள்ளக் கூடிய விடயம்தான்.

அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் ஜோ பைடன், இனம், மதம், சாதி கடந்து தகுதி, திறமை மிக்கவரான கமலா ஹரிஸ் அம்மையாரை தனது உப ஜனாதிபதியாகத் தேர்ந்து நிறுத்தியமை போன்று –

அன்று இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இனம், மதம், சாதி, கடந்து தகுதி, திறமைமிக்க லக்ஷ்மன் கதிர்காமரைப் பிரதமராக நியமிக்க முயன்றபோது மங்கள சமரவீரவும் அவரது அன்றைய சகாக்களும் சந்திரிகாவின் அந்த முயற்சிக்கு ஆப்பு அடித்திருக்கவிட்டால், நீதி, நியாயம் வேண்டி இலங்கைத் தீவும் மற்றும் மங்கள சமரவீர உட்பட நாங்கள் அனைவரும் இப்படிப் புலம்ப வேண்டி வந்திருக்காது என்பது உறுதியாகும்.

என்ன செய்வது, கட்டையில் ஏறும் காலத்தில்தானே நமக்கெல்லாம் 'சுடலை ஞானம்' பிறக்கின்றது...!

## வடக்கு இளைஞர்களும் என்னைப் போன்று அரசியலுக்கு வரவேண்டும் என்கிறார் நாமல்!



என்னைப்போல் வட பகுதிகளில் இருந்தும் இளைஞர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டு அமைச்சுகளை பொறுப்பெடுத்து யாழ்ப்பாண மாவட்டத்தில் அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண்டும் என இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட தலைமை காரியாலயத்தை நேற்று (ஞாயிற்றுக்கிழமை) திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

கடந்த 30 வருட காலமாக நடந்த யுத்தத்தின் தாக்கத்தின் காரணமாக வடபகுதி அபிவிருத்தி அடையாத நிலை காணப்பட்டது எனினும் யுத்தம் நிறைவடைந்த பின்னர் தற்போது நாட்டில் சுதந்திரம் நிலவி வருகின்றது.

எனினும் தற்போதைய அரசாங்கம் வடபகுதியில் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது அதிலும் குறிப்பாக விளையாட்டு துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து நாம் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உதைபந்தாட்டம், கிரிக்கெட் விளையாட்டுகளுக்கு மைதானங்கள் இந்த அரசாங்கத்தால் அமைத்துக் கொடுக்கப்பட உள்ளன. அதே போன்று சர்வதேச ரீதியில் விளையாடுவதற்காக வடக்கிலிருந்தும் இளைஞர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பது எமது ஆர்வம்.

எனவே கடந்த 30 வருட காலமாக இருந்த நிலையை மறந்து நாம் அனைவரும் புதிய யுகம் நோக்கி பயணிப்பதன் மூலம் எதிர்காலத்தில் எமது நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும்.– எனவும் அவர் தெரிவித்தார்.

## தெற்கு கடலில் மீன்பிடிப் படகில் தீ மீனவர், படகு கடற்படையால் மீட்பு!





தெற்கு கடல் பகுதியில் மீன்பிடிப் படகொன்றில் பல நாள்கள் ஏற்பட்ட தீயை வெற்றிகரமாக கட்டுப்படுத்திய கடற்படையினர் கடந்த சனிக்கிழமை குறித்த மீன்பிடிப் படகு மற்றும் மீனவர்களையும் பாதுகாப்பாக காலி துறைமுகத்துக்கு அழைத்து வந்துள்ளனர்.

அம்பலாங்கொடை மீன்பிடித் துறைமுகத்தை விட்டு வெளியேறிய 'ஜனத் ஐ' என்ற மீன்பிடிப் படகு கரைக்குத் திரும்பிக் கொண்டிருந்தவேளை, கொக்கலை கடல் பகுதியில் வைத்து அதன் இயந்திர அறையில் திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் ரோந்துப் பணியில் இருந்த தெற்கு கடற்படை கட்டளையுடன் இணைக்கப்பட்ட ஒரு கடலோர கண்காணிப்பு ரோந்து படகு மீன்பிடி படகில் ஏற்பட்ட தீ விபத்தை அவதானித்துள்ளது.

அதன்படி, கடலோர கண்காணிப்பு ரோந்து படகு மீன்பிடி படகில் பல நாள்கள் ஏற்பட்ட தீயைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளமையுடன், தீயை அணைக்கும் நடவடிக்கைகளை அதிகரிக்க காலி துறைமுகத்திலிருந்து ஒரு துரித தாக்குதல் படகொன்றும் அனுப்பப்பட்டுள்ளது.

அதன்படி, துரித தாக்குதல் படகு மற்றும் கடலோர பாதுகாப்பு படகு ஆகியவற்றின் கடற்படை வீரர்களால் இந்தத் தீயை வெற்றிகரமாக அணைக்க முடிந்தது.

மேலும், இந்தச் சம்பவத்தில் மீன்பிடி படகில் இருந்த மீனவர்கள் காயமடையவில்லை. இந்நிலையில், மீனவர்களும், படகும் கடற்படை மூலம் காலி மீன்பிடித் துறைமுகத்துக்குப் பாதுகாப்பாகக் கொண்டு வரப்பட்டது.

மேலும், கொவிட் 19 பரவுவதைத் தடுக்க வழங்கப்பட்ட சுகாதார அறிவுறுத்தல்கள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றி இந்த நடவடிக்கைகள் கடற்படையால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## மேல்மாகாண பொலிஸ் நிலையங்களில் 256 பொலிஸாருக்கு கொரோனா தொற்று!

மேல் மாகாணத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் கொரோனா தொற்றுக்குள்ளான பொலிஸ் அதிகாரிகளின் எண்ணிக்கையானது 256 ஆக உயர்வடைந்துள்ளது.

ஆறு பொலிஸார் குணமடைந்து வைத்தியசாலைகளிலிருந்து வெளியேறியுள்ள நிலையில், 250 பேர் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதுவரை 317 பொலிஸார் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமையுடன், 1,447 அதிகாரிகள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படவும் அறிவுறுத்தல் பிறப்பிக்கப்பட்டது.

இவர்களில் 23 பேர் தமது தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவுசெய்துள்ளமையுடன், 1,424 பொலிஸ் அதிகாரிகள் மாத்திரம் தற்போது தனிமைப்படுத்தலில் உள்ளனர்.

## ஐக்கிய அரபு இராச்சியத்தில் நங்கூரமிட்டது நியூ டயமன்ட்!

இலங்கை கடற்பரப்பில் தீ பரவல் ஏற்பட்ட நியூ டைமண்ட் கப்பல் இந்தியப் பெருங்கடல் முழுவதுமான நீண்ட பயணத்துக்குப் பின்னர் ஐக்கிய அரபு இராச்சியத்துக்குச் சென்றுள்ளது.

அந்தக் கப்பல் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை புஜைராவில் நங்கூர மிட்டதாக சமூக வலைத்தளங்களில் வெளியான படங்கள் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

குவைத்தின் மீனா அல் அஹ்மதி துறைமுகத்திலிருந்து இந்தியாவிற்கு 2 லட்சத்து 70 ஆயிரம் மெட்ரிக் தொன் கச்சா எண்ணெய்யை கொண்டு சென்று கொண்டிருந்த இந்தக் கப்பல், இலங்கையின் கிழக்கு கடல் பகுதியில் 2020 செப்ரெம்பர் 03 ஆம் திகதி தீ விபத்துக்குள்ளானது.

தீ பரவியபோது இந்தக் கப்பல் 37 கடல் மைல் தொலைவில் பயணித்து என்றும் கப்பலின் இயந்திர அறையில் ஏற்பட்ட கோளாறே தீ பரவக் காரணம் என்றும் அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அரசிடமிருந்து படகுகளை மீட்க பிரதமர் மோடி நடவடிக்கை எடுக்கவேண்டும்

## வை.கோ. வலியுறுத்தல்

தமிழக மீனவர்களின் படகுகளை அழிக்க இலங்கை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ள விவகாரத்தில் பிரதமர் மோடி மற்றும் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோர் உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென ம.தி.மு.க. பொதுச்செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான வைகோ வலியுறுத்தியுள்ளார்.

பிரதமர் மோடி மற்றும் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோருக்கு எழுதிய கடிதத்திலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் வைகோ மேலும் கூறியுள்ளவை வருமாறு:-



கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக, இலங்கைக் கடற்படை அத்துமீறி வந்து, தமிழக மீனவர்கள் மீது துப்பாக்கித் தாக்குதல் நடத்தி 600 இற்கும் மேற்பட்ட மீனவர்களைக் கொன்றது.

நூற்றுக் கணக்கானவர்களைப் பிடித்துக்கொண்டு போய் இலங்கைச் சிறைகளில் அடைத்தனர். அவர்களது படகுகளைப் பறிமுதல் செய்தனர். ஒவ்வொரு மீன்பிடிப் படகும் 25 முதல் 40 லட்சம் பெறுமதியானவை. தமிழக மீனவர்கள் கடன் வாங்கி, அதற்காக வட்டி கட்டி வருகின்றார்கள். அந்தப் படகுகள்தான் அவர்களது வாழ்வாதாரம்.

இலங்கைக் கடற்படையின் அத்துமீறல்களைத் தடுக்குமாறு கோரி, 2015 – 2016 ஆம் ஆண்டுகளில் நான் தொடர்ச்சியாகத் தங்களிடம் பலமுறை கோரிக்கைகள் விடுத்துள்ளேன். ஆனால், பயன் எதுவும் இல்லை.

தற்போது, 121 படகுகளை உடைத்து நொறுக்க இலங்கை நீதிமன்றம் ஆணை பிறப்பித்து உள்ளதாகச் செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

ஆகவே, இந்திய அரசு உடனடியாக இந்தப் பிரச்சினையில் தலையிட்டு, அந்தப் படகுகளை மீட்டுத் தர வேண்டும் அல்லது அதற்கு இழப்பீட்டுத் தொகை பெற்றுத் தர வேண்டும். தாங்கள் இந்தப் பிரச்சினையில் உரிய கவனம் செலுத்த வேண்டும். – என வலியுறுத்தியுள்ளார்.

## கமலா ஹாரிஸூக்கு வாழ்த்து தெரிவித்து ஸ்டாலின் கடிதம்!



அமெரிக்க துணை ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள கமலா ஹாரிஸூக்கு வாழ்த்து தெரிவித்து, தி.மு.க.தலைவர் மு.க.ஸ்டாலின் தமிழில் கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதம் தொடர்பாக முகப்புத்தக பதிவில் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளவை வருமாறு -

கமலா ஹாரிஸ், அமெரிக்காவின் முதல் பெண் துணை ஜனாதிபதி என்பதோடு, தமிழ்நாட்டைச் சேர்ந்த பெண்மணி என்பது தமிழக மக்கள் அனைவரையும் பெருமிதம் அடைய வைக்கும் இனிய செய்தி.

ஒரு தமிழ்ப்பெண், அமெரிக்காவையும் ஆளத் தகுதி படைத்தவர் என்பதை கமலா ஹாரிஸின் கண்ணோட்டமும், கடின உழைப்பும் மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறது.

அவரது ஆட்சிக் காலம், அமெரிக்காவுக்கு மேலும் புகழ் சேர்த்து, தமிழர் தம் பாரம்பரியப் பெருமையை உலகுக்குப் பறை சாற்றுவதாக அமையட்டும்.- என அந்த பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இந்திய கடலோர காவல் படையால் மர்மப் படகு ஒன்று சுற்றிவளைப்பு!

அந்தமான் – நிகோபார் தீவுகள் அருகே உள்ள கடல் பகுதியில், மியன்மார் நாட்டைச் சேர்ந்த 12 பேருடன் வருகை தந்த மர்ம படகை கடலோர காவல்படையினர் சுற்றிவளைத்



துள்ளனர் என இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விடயம் தொடர்பாக இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவித்துள்ளவை வருமாறு –


அந்தமான் – நிகோபார் தீவுகள் அருகே உள்ள கடல் பகுதியில் கடலோர காவல்படை, ஹெலிக்கொப்டர் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தது.

இதன்போது சந்தேகப்படும்படி படகு ஒன்று வருவதை அவதானித்து, கடலோர காவல் படைக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கடலோர காவல்படையினர் கப்பலில் சென்று அந்த படகையும், அதிலிருந்த 12 மியன்மார் நாட்டினரையும் சுற்றி வளைத்துள்ளனர்.

இந்நிலையில் அந்தப் படகைக் கைப்பற்றிய கடலோர காவல் படையினர், அதில் வருகை தந்த 12 பேரிடமும் மேலதிக விசாரணையை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொரோனாத் தடுப்புக் குழுவின் தலைவராக அமெரிக்காவில் இந்திய வம்சாவளி டாக்டர்



அமெரிக்காவில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த புதிய ஜனாதிபதி ஜோ பைடன் ஏற்படுத்த உள்ள அரசு நடவடிக்கை குழுவின் தலைவராக இந்திய வம்சாவளி மருத்துவ நிபுணர் விவேக் மூர்த்தி நியமிக்கப்பட உள்ளார் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

கர்நாடகாவை பூர்வீகமாகக் கொண்ட விவேக் மூர்த்தி (வயது – 43) ஒபாமா காலத்தில் அமெரிக்காவின் சர்ஜன் ஜெனரல் என்ற பதவியை வகித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜோ பைடனுக்கு எடப்பாடி வாழ்த்து!

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றுள்ள ஜோ பைடன் மற்றும் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் ஆகியோருக்கு முதல்வர் எடப்பாடி பழனிசாமி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட ஜோ பைடன், துணை ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட்ட செனட்டர் கமலா ஹாரிஸ் இருவரும் வெற்றி பெற்றுள்ளனர்.

மேலும், அமெரிக்க வரலாற்றில் துணை ஜனாதிபதியாக முதன் முதலில் பெண் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்றால் அது கமலா ஹாரிஸ்தான். இந்தியாவை குறிப்பாகத் தமிழகத்தைப் பூர்வீக மாகக் கொண்டவராவார்.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதியாக தேர்வாகியுள்ள ஜோ பைடனுக்கும், துணை அதிபராக தேர்வாகியுள்ள கமலா ஹாரிஸூக்கும் ஏனைய நாடுகளை சேர்ந்த தலைவர்கள் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

அந்தவகையில், தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமியும் ஜோ பைடனுக்கும், கமலா ஹாரிஸூக்கும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

முதல்வர் எடப்பாடி பழனிசாமி, தனது ருவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் கூறியுள்ளதாவது –

அமெரிக்காவின் 46 ஆவது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜோ பைடனுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அமெரிக்காவின் முதல் பெண் துணை ஜனாதிபதியாக கமலா ஹாரிஸ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளமையை அறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இந்த வெற்றியின் மூலம் கமலா ஹாரிஸ், தமிழகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

## ஜோ பைடன், கமலா ஹாரிஸூக்கு மணற் சிற்பத்தால் கலைஞர் வாழ்த்து

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற ஜோ பைடன் மற்றும் கமலா ஹாரிஸூக்கு மணற் சிற்பம் வடித்து மணற்சிற்ப கலைஞர் சுதர்சன் பட்நாயக்க வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட ஜோ பைடன் ஜனாதிபதியாகவும் கமலா ஹாரிஸ் துணை ஜனாதிபதியாகவும் வெற்றி பெற்றுள்ளனர்.

இதனையடுத்து அவர்கள் இருவருக்கும் ஏனைய நாடுக ளைச் சேர்ந்த தலைவர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் எனப் பலரும் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையிலேயே இந்தியாவை சேர்ந்த சிற்ப கலைஞரான சுதர்சன் பட்நாயக், மணல் சிற்பம் ஊடாகத் தனது அன்பை வெளிப்படுத்தியுள்ளார்.ஒடிசாவில் உள்ள பூரி கடற்கரையில் ஜோ பைடன் மற்றும் கமலா ஹாரிஸின் புகைப் படங்களைச் சிற்பமாக வடித்து சுதர்சன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.




கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
| --- | --- |
| பிறந்த திகதி – 1983.06.08 | பிறந்த திகதி – 1991.06.19 |
| மதம் – இந்து A– ஆசாரி | மதம் – இந்து V |
| நட்சத்திரம் – அச்சுவினி | நட்சத்திரம் – உத்தரம் – 1 |
| பாவம் – 29 1/2 | பாவம் – 56 1/4 |
| சூரி/ செவ் – 2 இல் | சூரி/ செவ் – 1 இல் 32 புள்ளி |
| கல்வி – பட்டதாரி | கல்வி – UK பட்டதாரி |
| தொழில் – அபிவிருத்தி உத்தியோகத்தர் | தொழில் – கம்பனி முகாமையாளர் |
| எதிர்பார்ப்பு – படித்த உத்தியோகப் பெண். | எதிர்பார்ப்பு – இலங்கையிலுள்ள பட்டதாரி மணமகள். |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முகநூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம்,
சந்தை வீதி
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528

## ஜம்மு - காஷ்மீரில் உக்கிர மோதம் 4 படையினர் 3 பயங்கரவாதிகள் பலி!



ஜம்மு – காஷ்மீரில் நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் இராணுவ கட்டளை அதிகாரி உள்ளிட்ட நான்கு பாதுகாப்புப் படை வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்த மோதலில் மேலும் இரண்டு வீரர்கள் காயமடைந்துள்ளனர் என இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குப்வாரா மாவட்டம் மச்சில் செக்டர் பகுதியில் பயங்கரவாதிகள் ஊடுருவ முயன்றபோது மோதல் ஏற்பட்டதாகவும் இதன்போது மூன்று பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர் எனவும் இந்திய இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மோதல் நேற்று காலை தொடங்கிய நிலையில் தொடர்ந்து இடம்பெற்றுவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈட்டா புயலால் குவாத்தமாலாவில் நிலச்சரிவில் சிக்கி 150 பேர் பலி!



மத்திய அமெரிக்காவைத் தாக்கிய புயலை தொடர்ந்து பெய்த மழை காரணமாக குவாத்த மாலாவில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி இதுவரை 150 பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

நாட்டின் மத்திய பிராந்தியமான ஆல்டா வெராபாஸில் உள்ள கியூஜாவில் பல வீடுகள் மண்ணில் புதையுண்டுள்ளன எனவும் அதில் பலர் உயிரிழந்துள்ளனர் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சீரற்ற வானிலை காரணமாக பனாமா விலிருந்து ஹோண்டுராஸ் மற்றும் மெக் ஸிகோ வரை பேரழிவை ஏற்படுத்தியுள்ளதுடன் அவற்றுக்கிடையே 50 இற்கும் மேற்பட்ட வெள்ளம் தொடர்பான இறப்புகள் பதிவாகி யுள்ளன. இந்நிலையில் தற்போது பாதுகாப்பு தரப்பினர் மீட்பு பணிகளில் தொடர்ந்தும் ஈடு பட்டு வருகின்றனர் என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

பல ஆண்டுகளாக மத்திய அமெரிக்கா வைத் தாக்கும் கடுமையான புயல்களில் ஈட் டாவும் ஒன்றாகும், இந்த பிராந்தியத்தில் வெள் ளப்பெருக்கு தொடரும் என்று அமெரிக்க தேசிய சூறாவளி மையம் எச்சரித்துள்ளது.

# அமெரிக்கா ஜனாதிபதி ஜோ பைடன் கையாளவிருக்கும் முக்கிய விடயங்கள்



அமெரிக்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்க வுள்ள ஜோ பைடன் தனது ஆட்சிக் காலத்தில் கையாளவுள்ள முக்கிய விடயங்கள் தொடர்பாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதனடிப்படையில் அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள பாரிய சுகாதார நெருக்கடியான கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துதல் தொடர்பிலேயே ஜோ பைடன் அதிக கவனம் செலுத்தவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ள மாற்றுத் திட்டம் தொடர்பான அறிவிக்கையில் அமெரிக்காவில் அதிகளவான கொரோனா பரிசோதனைகளை மேற்கொள்ளவும், அமெரிக்கர்கள் அனைவரும் முகக் கவசங்களை அணிவதற்கான உத்தரவு களைப் பிறப்பிப்பதற்கும் ஜோ பைடன் தீர்மானித் துள்ளார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தவிர அமெரிக்க பொருளாதாரம், உலகளா விய ரீதியில் நிலவும் இன முரண்பாடுகள் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான விவகாரங்களி லும் ஜோ பைடன் அதிக கவனம் செலுத்தவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜோ பைடன் அதிக வாக்குகளால் வெற்றிபெற்றுள்ள போதிலும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மாற்றுக் கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்.

எவ்வாறாயினும் தமது எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக ஜனநாயகக் கட்சியின் திட்டங்களை வகுக்க ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐந்து கோடியைத் தாண்டியுள்ளது கொரோனா பாதிப்பு எண்ணிக்கை!

கொடிய கொரோனா வைரஸ் (கொவிட் - 19) பெருந் தொற்றால், உலகளவில் ஐந்து கோடிக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அண்மைய உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களின் படி, உலகளவில் ஐந்து கோடியே ஏழு லட்சத்து 31 ஆயிரத்துக் கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் உலகளவில் வைரஸ் தொற்றால் 12 லட்சத்து 61 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இதுதவிர மூன்று கோடியே 57 லட்சத்து 93 ஆயிரத் துக்கும் மேற்பட்டோர் வைரஸ் தொற்றிலிருந்து மீண்டு வீடு திரும்பியுள்ளனர்.

உலகளவில் கொவிட் - 19 தொற்றால் அதிக பாதிப்பும் மற்றும் உயிரிழப்புகளை சந்தித்த நாடாக அமெரிக்கா விளங்குகின்றது.



# காலநிலை ஒப்பந்தத்தில் அமெரிக்கா மீண்டும் இணைந்தால் வரவேற்போம்!

## ஆஸ்திரேலியா தெரிவிப்பு

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் ஜோ பைடன் தலைமையில் அமெரிக்கா மீண்டும் பாரிஸ் காலநிலை ஒப்பந்தத்தில் இணைந்து கொண்டால் வரவேற்போம் என ஆஸ்தி ரேலியா தெரிவித்துள்ளது.

ஆஸ்திரேலியாவில் கார்பன் வாயுவால் ஏற்படும் சூழல் மாசைக் கட்டுப்படுத்துதல் தொடர்பில் தான் எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகள் தொடர்பாகக் கருத்து வெளி யிட்டுள்ள அந்நாட்டின் பிரதமர் ஸ்கொட் மொரிஸன், இந்தக் கருத்தை வெளியிட் டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் கருத்து வெளியிட்டுள்ள அவர் –

நாம் எப்போதுமே அங்கத்துவம் பெற் றுள்ள பாரிஸ் காலநிலை ஒப்பந்தத்தில் அமெரிக்கா மீண்டும் இணைந்துகொண் டால் நாம் வரவேற்போம். நம்மைப் போலவே



உலக சுகாதார அமைப்பு போன்ற சர்வதேச அமைப்புகளும் இந்த விடயத்தை வரவேற் கும்.– எனத் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் அமெரிக்கா பாரிஸ் கால நிலை ஒப்பந்தத்தில் இருந்து உத்தியோக பூர்வமாக விலகுவதாக அறிவித்திருந்தது.

எனினும் இந்த ஒப்பந்தத்தில் மீண்டும் இணைந்துகொள்வோம் என அமெரிக் காவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஜோ பைடன் உறுதியளித் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கங்கள் மற்றுமோர் உலகப் போருக்கு வழிவகுக்கும்!

## எச்சரிக்கின்றது பிரித்தானியா

கொரோனா வைரஸின் தாக்கங் கள் மற்றுமோர் உலகப்போருக்கு வழிவகுக்கலாம் என பிரித்தானியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

சமகாலத்தில் கொரோனா வைரஸ் பெருந் தொற்றால் உலகளாவிய ரீதி யில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஸ்திரமற்ற தன்மை மற்றும் நாடுகளுக்கான பொருளாதார சரிவுகள் என்பன இவ்வாறு மற்றுமோர் உலக யுத் தத்தை ஏற்படுத்தலாம் என பிரித் தானிய படைத் தளபதி எச்சரித் துள்ளார்.

பிரித்தானியாவில் உலக யுத்தங் கள் மற்றும் ஏனைய பிளவுகள் கார ணமாக உயிர் நீத்தவர்களுக்கான நினைவு அஞ்சலிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், இந்த விடயம் தொடர்பாக ஊடகம் ஒன்றுக்கு வழங் கிய செவ்வியிலேயே பிரித்தானிய படைத்தளபதி நிக் கார்ட்டெர் இந்த எச்ச ரிக்கையை விடுத்துள்ளார்.

மேலும் தெரிவித்துள்ள அவர்–

உலக சமாதானம் தொடர்பான கவலையான, ஸ்திரத்தன்மையற்ற மற்றும் உலகளாவிய போட்டிகள் நிகழக்கூடிய ஒரு சூழலில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

இதனால் பிராந்தியங்களுக்கு இடையிலான பிளவுகள் ஏற்படும் சூழ்நிலை அதிகரித்துள்ளது. – எனத் தெரிவித்துள்ளார்.

இதன்போது, இந்த சூழ்நிலை இன்னோர் உலகப் போரை ஏற்ப டுத்துவதற்கு வழி வகுக்குமா? என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், 'நான் சொல்கிறேன் இது ஓர் அபாயம். நாம் இந்த அபாய நிலை தொடர்பில் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்' எனத் தெரிவித் துள்ளார்.

# வெள்ளை மாளிகையும் 'அவுட்' மனைவி மெலானியாவும் 'டவுட்'!

## ட்ரம்பின் பரிதாப நிலைமை

அமெரிக்க அதிபர் தேர்தலில் தோல்வியுற்ற ரொனால்ட் ட்ரம்பை, அவரது மனைவி மெலானியா விவாகரத்து செய்ய உள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

வெள்ளை மாளிகையை விட்டு ட்ரம்ப் வெளியேறியதும், அவரை மெலனியா விவாக ரத்து செய்வார் என, வெள்ளை மாளிகையின் முன்னாள் ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

ட்ரம்ப் அதிகாரத்தில் இருக்கும்போது அவரை விவாகரத்து செய்தால் தண்டிக்கப்படலாம் என்ற அச்சத்தில் மெலானியா தனது முடிவை ஒத்திவைத்துள்ளார் எனவும் ஊழியர்கள் கூறியுள்ளனர்.

ட்ரம்புக்கும் அவரது மூன்றாவது மனைவி மெலானியாவுக்கும் இடையே மனக் கசப்பு இருப்பதாக, ஏற்கனவே பல தகவல்கள் வெளியாகியுள்ளன என்பதும் குறிப்பிடத் தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இன்னமும் சமூகத் தொற்று ஏற்படவில்லை சுகாதார அமைச்சு மீண்டும் வலியுறுத்து!



இலங்கையில் கொரோனா வைரஸ் சமூக தொற்றாக மாறவில்லை என சுகாதார அமைச்சு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இதுவரை கண்டறியப்பட்ட அனைத்து நோயாளிகளும் ஏற்கனவே உள்ள ஒரு கொத்தணியுடன் இணைக்கப்பட் டுள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

அதிகாரிகள் எவ்வாறான கருத்துக்களைத் தெரிவித்து வந்தாலும் சமூக பரவல் நாட்டில் உள்ளது என்பதை எதிர்க் கட்சிகள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றன.

இருப்பினும், இந்த நேரத்தில் கண்டறியப்பட்ட அனைத்து நோயாளிகளும் மினுவாங்கொட மற்றும் பேலியகொட கொத்தணிகளுடன் இணைக்கப்பட்டுள்ளனர் என விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர கூறினார்.

ஆரம்பத்தில் மினுவாங்கொட கொத்தணியில் இருந்து ஏராளமான நோயாளிகள் கண்டறியப்பட்டனர். ஆனால் இப்போது எண்ணிக்கையில் குறைவு காணப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

முடக்க கட்டுப்பாடுகள் இல்லாதபோது பேலியகொட கொத்தணியுடன் தொடர்புடைய பெரும்பாலானோர் கண்டறியப்பட்டமையால், அது ஏற்கனவே ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு பரவியிருப்பது கண்டறியப்பட்டது என்றும் இதன் விளைவாக நாடு முழுவதும் ஏராளமான நோயாளிகள் அடையாளம் காணப்பட்டனர் எனவும் அவர் தெரிவித்தார்.

பெரும்பாலான நோயாளிகள் ஒரு கொத்தணியுடன் இணைக்கப்பட்டுள்ளமையால் சமூக பரவல் இல்லை எனக் குறிப்பிட்டுள்ள சுதத் சமரவீர, இருப்பினும், சுகாதார வழி காட்டுதல்களைப் பின்பற்றத் தவறினால், சமூக தொற்று ஏற்படுவதற்கான ஆபத்து இருப்பதாகவும் அவர் எச்சரித்தார்.

# வன்னியின் காவலன் சிவசிதம்பரத்தின் 28 ஆவது நினைவுதினம் அனுஷ்டிப்பு!







வன்னியின் காவலன் என அழைக்கப்பட்ட ப.சிவசிதம்பரத்தின் 28 ஆவது நினைவுதினம் இன்று (திங்கட்கிழமை) அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியாவில் அமைந்துள்ள அவரது சிலையடியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. பண்டார வன்னியன் மறுமலர்ச்சி மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வவுனியா நகரசபை உறுப்பினர் நா.சேனாதிராஜா, பண்டார வன்னியன் நற்பணி மன்றத்தினர் உட்பட பலரும் கலந்து கொண் டிருந்தமையுடன், சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

# கொழும்பு மத்திய தபால் பரிமாற்றம் மீண்டும் மட்டுப்படுத்தப்பட்ட சேவை!

கொழும்பு மத்திய தபால் பரிமாறல் கடமைகள் சில மீண்டும் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன என தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன வெளியிட்டுள்ள ஊடக அறிக்கை பின்வருமாறு:-

குறைந்த பட்ச பணியாளர்களை பயன்படுத்தி மத்திய தபால் பரிமாறல் கடமைகளை தனிமைப்படுத்தல் ஊரடங்கு நிலைமைக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்ட போதிலும் , இந்த ஆளணியினரை எழுந்தமானமாக பி.சி.ஆர். ரிசோதனைக்கு உட்படத்திய மூன்று சந்தர்ப்பங்களில் மூவர் தொற்றுக்குள்ளாகியமை பதிவானமையையடுத்து இந்த அலுவல்களை முழுமையாக இடைநிறுத்துவதற்கு கடந்த 05 ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டது.

இன்று 9 ஆம் திகதி ஊரடங்கு சட்டத்தில் தளர்வு ஏற்படுத்தப்படுவதைத் தொடர்ந்து கிருமி நீக்கத்துக்கு உட்படுத்தப்பட்ட மத்திய தபால் பரிமாறல் வரையறுக்கப்பட்ட கடமைகள் சிலவற்றுக்காக திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக சர்வதேச விரைதூதர் தபால் சேவை, வர்த்தக தபால் சேவை, உள்ளூர் கடுகதி தபால் சேவை என்பன நவம்பர் மாதம் 9 ஆம் திகதி தொடக்கம் செயற்பாட்டு அலுவல்களுக்காக திறக்கப்படும், பதிவுத் தபால் பிரிவு தெரிவு நடவடிக்கைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமையன்று திறப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் கொழும்பு மாநகரிலும் அதனை அண்டியுள்ள பகுதிகளிலும் அரசாங்க அலுவலகங்களுக்கு பதிவு செய்யப்பட்ட தபால்களை விநியோகிக்கும் அலுவல்களை 11ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் அல்லது தனியார் நிறுவனங்களுக்கான முத்திரை இடல் இயந்திரம் தொடர்பான அலுவல்களை இன்று தொடக்கம் முன்னெடுக்கக் கூடியதாக இருப்பதுடன் அதற்கான 0112 320 700 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு நேரத்தை தெரிவுசெய்துக் கொள்ளுவதற்கான முன்னேற்பாட்டை மேற்கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்கின்றோம்.

இருப்பினும் வரையறுக்கப்பட்ட ஊழியர்களைப் பயன்படுத்தி கடமைகளை நிறைவேற்றவேண்டியிருப்பதால் கடமைகள் ஓரளவிற்கு தாமதமடையக் கூடும் என்பதை மேலும் அறியத்தருகின்றோம்.

# மயூராபதி பத்திரகாளி வழிபாட்டில் பிரதமர் மஹிந்த கலந்துகொண்டார்







பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆசீ வேண்டி வெள்ளவத்தை மயூராபதி பத்திரகாளியம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற ஆசீர்வாத பூஜையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் கலந்து கொண்டார்.

வெள்ளவத்தை மயூரபதி ஶ்ரீ பத்திர காளியம்மன் ஆலயத்தின் தலைமை பூசகரான உதய ராகமவால் இந்த ஆசீர்வாத பூஜை நடத்தப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் பிரதமரின் பாரியார் ஶ்ரீரந்தி ராஜபக்ஷவும் கலந்து கொண்டார்.

இதன்போது கொரோனா தொற்று நிலைமையிலிருந்து விடுபட்டு பாதுகாப்பாக வாழ்வதற்கு கௌரவ பிரதமரின் குடும்பத்தினர்களுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் பிரார்த்திக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஆலய வளாகத்தில் அமைந்துள்ள 'கடவர' ஆலயத்திலும் பிரதமர் ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டார்.

# யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானம் புனரமைக்கப்படும்!



அமைச்சர் நாமல் உறுதி

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானம் வடக்கின் சிறந்த மைதானமாக விரைவில் தரமுயர்த்தப்படவுள்ளதாக இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தை இன்று (திங்கட்கிழமை) காலை பார்வையிட்டமையோடு அந்த விளையாட்டு மைதானத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் ஆராய்ந்த பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

எதிர்வரும் ஆண்டுகளுக்குள் துரையப்பா விளையாட்டு மைதானத்தை சர்வதேச தரத்தை ஒத்தவகையில் நாங்கள் புனரமைக்கவுள்ளோம்.

வடக்கில் சிறந்த ஓர் உதைபந்தாட்ட மைதானம் ஆக தற்போது யாழ் துரையப்பா மைதானம் திகழ்கின்றது.

அத்தோடு இலங்கை பூராகவும் உதைபந்தாட்ட கழகங்களை நாங்கள் புதிதாக ஆரம்பிக்க உள்ளோம். அதேபோல யாழ்ப்பாணத்திலும் புதிதாக கழகம் உருவாக்கப்படவுள்ளது.

துரையப்பா விளையாட்டு மைதானத்தில் உள்ளக அரங்கில் உடற்பயிற்சி நிலையம் ஒன்றையும் விரைவில் ஆரம்பிப்பதற்கு நாங்கள் எண்ணியுள்ளோம்.

அதனையும் தயார் படுத்துவதன் மூலம் ஏனைய மாவட்டங்களைப் போல வடக்கு இளைஞர்களும் தமது உதைபந்தாட்ட திறமையை வெளிப்படுத்துவதற்கு இந்த அரசு மேற்படி முயற்சிகளை முன்னெடுக்க உள்ளோம். - என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.11.2020 இல் வெளியிடப்பெற்றது.